முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 28.04.2026

O.S No. 252/2016

பி.வா.சா.1- செல்வி

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் தற்போது எந்த ஊரில் வசிக்கிறேன் என்றால் தேரிவிளை ஆகும். வழக்கு பட்டிகை சொத்திற்கும் தேரிவிளைக்கும் இடையே சுமார் 9 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரி. நான் 3 வருடமாக தேரிவிளையில் வசித்து வருகிறேன். பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் மற்ற பிரதிகள் ராஜகனி, கவிதா, சுயம்புகனி எங்கு வசிக்கிறார்கள் என்றால் வாடகை வீட்டில் வட்டவிளையில் ராஜகனியும் அச்சன்குளத்தில் கவிதாவும், காட்டுவிளையில் சுயம்புகனியும் வழக்கிற்காக வசிக்கிறார்கள். நாங்கள் வெவ்வேறு ஊர்களில் சுமார் 5 வருடங்களாக வசித்து வருகிறோம். அதற்கு முன்பாக குந்தலில் நாங்கள் வசித்து வந்தோம்.

நானும் எனது சகோதரிகளும் சேர்ந்து முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.471/2012 என்ற வழக்கை முத்துசுவாமிக்கு எதிராக தாக்கல் செய்து இருந்தோம் என்றால் சரி. முத்துசுவாமி எனக்கு மாமன் முறை ஆவார். அவர் எனது மாமா என்று காட்ட ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. அ.வ.எண்.471/2012 வழக்கை தாக்கல் செய்த போது ராஜகனி அக்கா வட்டவிளையில் தாமசித்து வந்தார் என்றால் சரி. வட்டவிளை வடிவீஸ்வரம் கிராமத்தில் உள்ளது என்றால் சரி. வட்டவிளையில் இருந்துவழக்குசொத்தானது 25 கி.மீ துரம் இருக்கும் என்றால் சரி.

அ.வ.எண்.471/2012 வழக்கை தாக்கல் செய்த போது கவிதா அக்கா அச்சன்குளத்தில் தாமசித்து வந்தார் என்றால் சரி. அச்சன்குளம் வழக்கு சொத்தில் இருந்து 6 கி.மீ தூரத்தில் இருக்கும் என்றால் சரி. நான் 2012 ல் விஜயநகரியில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. தேரிவிளையில் குந்தலில் வசித்து வந்தேன். அ.வ.எண் 471/2012 பிராதில் எனது முகவரி

விஜயநகரி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரி எனது சகோதரி அவ்வாறு கொடுத்திருப்பார். அ.வ.எண்.471/2012 வழக்கை தாக்கல் செய்த போது சுயம்புகனி தேரிவிளையில் தாமசித்து வந்தார் என்றால் சரி.

அ.வ.எண்.471/2012 க்கு முன்பாக குந்தலில் நான் வசித்து வந்ததற்கு ஆவணம் எதாவது இருக்கிறதா என்றால் இருக்கிறது அதனை தாக்கல் செய்துள்ளேன். சாட்சி தற்போது தாக்கல் செய்யவில்லை என்று கூறுகிறார். அ.வ.எண்.471/2012 வழக்கு தாக்கல் செய்த பிறகு வழக்கு சொத்து இருக்கும் குந்தலில் நான் இருந்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் ஒருபோதும் வழக்கு சொத்தில் வசித்தது இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து மொத்தம் எத்தனை சென்ட் என்றால் 65 சென்ட் ஆகும். வழக்கு சொத்து சம்மந்தமாக 2003 ம் ஆண்டு முத்துசுவாமி என்பவர் என் அம்மாவிற்கு எதிராக முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.163/2004 வழக்கை தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணம் அந்த வழக்கின் பிராது நகல் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை எனக்கு அது குறித்து தெரியாது.

வாதியின் ஆவணங்களை பார்க்காமல் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. என் அம்மா பெயரில் உள்ள வழக்கு குறித்து நான் கேள்வி பட்டுள்ளேனா என்றால் இல்லை. என் அம்மா 5.7.2003 ல் எனக்கு ஆவணம் எழுதி கொடுத்தார். என் அம்மா எங்கள் நால்வர் பெயரில் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி கொடுத்தார்கள். ஒரு சொத்தை எழுதி கொடுத்தார்கள். அந்த செட்டில்மென்ட் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அந்த செட்டில்மென்ட் ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

தற்போது என்னிடம் காட்டபடும் வா.சா.ஆ.10 ஆவணம் என் அம்மா எழுதிகொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் என்றால் சரி. அதில் 2 பட்டிகை சொத்துக்கள் உள்ளது என்றால் சரி. முதல் லக்கத்தில் 547/3 ல் 1 ஏக்கர் 30 சென்ட்டில் 33 சென்ட்டாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அதன் பழைய சர்வே எண்.1727 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அதின் இரண்டாவது லக்கத்தில் தெற்குபக்கம் 30 சென்ட்டாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அதன் பழைய சர்வே எண்.1727, புது சர்வே எண்.547/3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

நாங்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.471/2012 ல் சொத்து விவரத்தில் பழைய சர்வே எண்.1101 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. என் அம்மா எழுதி கொடுத்த சொத்தானது பழைய சர்வே எண்.1727 ல் தான் உள்ளது என்றாலும் அதன் புதிய சர்வே எண்.547/3 இல்லை என்றாலும் அதனால் வழக்கு சொத்திற்கும் என் அம்மா எழுதிகொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தில் உள்ள சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உண்மைகளை மறைத்து அ.வ.எண்.471/2012 ன் பிரதி தோன்றா தரப்பினர் ஆக்கபட்டு அவருக்கு எதிராக தீர்ப்பாணை பெறபட்டது என்றால் சரியல்ல. என் அம்மா வழக்கு சொத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்ததால் முத்துசுவாமி என் அம்மாவிற்கு எதிராக அ.வ.எண்.163/2003 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும் என் அம்மாவிற்கு எதிராக தீர்ப்பாணை பெற்று என் அம்மாவின் ஆக்கிரமிப்பை ஒழிப்பித்து பெற்றார் என்றாலும் சரியல்ல. அந்த வழக்கின் போது என் அம்மா பெயரில் சொத்துக்கள் இல்லை அவரிடம் இருந்து ஒழிப்பித்து பெற முடியாது. அவரது கையொப்பத்தை போலியாக போட்டுள்ளார்கள்.

அ.வ.எண்.163/2003 ல் என் அம்மா எங்களுக்கு எழுதிகொடுத்த செட்டில்மென்ட்

ஆவணங்களை ரத்து செய்து தீர்ப்பாணை வழங்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பை ரத்து செய்ய நான் ஏதும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் எ.வ.எண்.208 தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.208 ல் வாதி மற்றும் பிரதி யார் என்றால் செல்வடேனியேல் , பாத்திமா, கலைசெல்வி, ஆகியோர் பிரதிகள் ஆவார்கள். நாங்கள் வாதிகள் ஆவோம். அ.வ.எண்.208 வழக்கை எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம் என்றா்ல் கூடுதல் சார்பு நீதிமன்றம் ஆகும். அங்கிருந்து மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யபட்டது. அந்த வழக்கின் வருடம் என்ன என்றால் 2016 ஆகும். அந்த வழக்கில் 547/3 சொத்தை எங்களுடைய சொத்து என்றும் அதனை மீட்டு கொடுக்கவும் பரிகாரம் கேட்டிருந்தோம். அந்த சமயத்தில் யார் கைவசம் சொத்து இருந்தது என்றால் எங்கள் கைவசம் இருந்தது எங்கள் எதிர்தரப்பினர் எங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து இருந்ததால் நாங்களும் வழக்கு தாக்கல் செய்து இருந்தோம். அதுபோக வேறு பரிகாரம் கேட்டிருந்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கானது 2025 ல் தீர்ப்பு பிறப்பிக்கபட்டது.

இதுநாள்வரை அ.வ.எண்.163/2003 ல் எங்கள் அம்மா எங்களுக்கு எழுதிகொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தை ரத்து செய்து பிறப்பிக்கபட்ட தீர்ப்பாணையை ரத்து செய்யகோரி எந்த வழக்கும் எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அவ்வாறு ரத்து செய்யகோராததால் அ.வ.எண்.163/2003 ன் தீர்ப்பாணை எங்களை கட்டுபடுத்தும் என்றால் சரியல்ல.அ.வ.எண்.471/2012 வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்கில் வழக்கு சொத்தின் உரிமையை விளம்புகை செய்யவும் மிச்சவாரம் ரூ.18000/- கேட்டும் வழக்கு சொத்தை பிரதிகள் பாராதீனம் செய்யகூடாது என்றும் கேட்கபட்டுள்ளது என்றாலும் அ.வ.எண்.163/2003 ன் தீர்ப்பாணையை ரத்து செய்ய பரிகாரம் கேட்கவில்லை

என்றாலும் சரி. அதனால் அ.வ.எண்.163/2003 ன் படி எங்கள் செட்டில்மென்ட் ஆவணம் ரத்து செய்யபட்டது தற்போது வரை ஊர்ஜிதத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

அ.வ.எண்.471/2012 பிராது சொத்து விவரத்தில் சொல்லபட்டுள்ள சர்வே எண்ணானது எங்கள் செட்டில்மென்ட் ஆவணத்தில் உள்ள சர்வே எண்களுக்கு வேறாக உள்ளது என்றால் சரி. அ.வ.எண்.471/2012 வழக்கு தாக்கல் செய்யும்போது முத்துசுவாமி என்பவர் வழக்கு சொத்தை பல்வேறு பாகங்களாக பிரித்து பல நபர்களுக்கு 2007 ல் விலைக்கு கொடுத்து விட்டார் என்றால் சரி. கள்ளதனமாக விற்றுள்ளார்கள். வாதி அதில் 2 மனைகளை விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வாதி 24.10.2007 ல் வழக்கு சொத்தில் 1 வது ஐட்ட சொத்தையும் 2006 ல் 2 வது ஐட்ட சொத்தையும் விலைக்கு வாங்கினார் என்றால் தெரியாது.

2006,2007 ல் வாதி வழக்கு சொத்தை கிரயம் வாங்கி விட்டதால் 2012 ல் முத்துசுவாமிக்கு எதிராக நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பலநபர்களுக்கு முத்துசுவாமி விற்ற விவரம் தெரிந்தும் அவர் படுத்த படுக்கையாக நோய்வாட்பட்டு இருந்தபோது உரிய உரிமையாளர்களை கட்சி சேர்க்காமல் முத்துசுவாமிக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. முத்துசுவாமியும் வழக்கறிஞர் மூலம் வழக்கு நடத்தி வந்தார். அந்த வழக்கில் முத்து சுவாமி தோன்றா தரப்பினர் ஆக்கபட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கபட்டது வா.சா.ஆ.9 ல் துலங்கும் என்றால் சரி. அ.வ.எண்.471/2012 ன் தீர்ப்பாணையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அந்த தீர்ப்பாணைக்கு எதிராக செல்வடேனியேல் என்பவர் மேல்முறையீடு செய்ததில் அந்த வழக்கை விசாரணை நீதிமன்றத்திற்கு மீட்டனுப்புகை செய்து மறுபடியும் விசாரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்றால் சரி.

அ.வ.எண்.471/2012 தீர்ப்பாணை அடிப்படையில் நான் வழக்கு பட்டிகை சொத்திற்கு சென்றபோது எனக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு கன்னியாகுமரி காவல்நிலையத்தில் எதிர்எதிர் புகாரின் அடிப்படையில் குற்றவழக்கு பதிவு செய்யபட்டது என்றால் சரி. 2006 ல் வாதி 2 வது ஐட்ட சொத்தை விலைக்கு வாங்கி வீடு வைத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி எப்போது வீடு கட்டினார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் ஆணையர் நியமிக்கபட்டு வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுத்து ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. ஆணையர் தாக்கல் செய்த புகைப்படங்களில் உள்ள இடம் வழக்கு சொத்தா என்றால் எனக்கு தெரியாது.

வாதி விலைக்கு வாங்கிய இடத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றாலும் அந்த விவரத்தை நான் தெரிந்து கொண்டே தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் அப்துல் லத்தீப், செல்வடேனியேல், பாத்திமா, கந்தசாமி ஆகியோரின் வீடு உள்ளது என்றால் சரியல்ல. அப்துல் லத்தீப் மட்டுமே வீடு வைத்துள்ளார் மீதி இடங்கள் காலியாக உள்ளது. செல்வடேனியேல் தாக்கல் செய்த வழக்கில் எனக்கு ஆதரவாக அப்துல் லத்தீப் சாட்சி சொன்னார் என்றால் சரி. அப்துல் லத்தீப் எனக்கு ஆதரவாக சாட்சி அளித்ததால் அவரது வீடு மட்டும் உள்ளது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வாதியின் சொத்தில் அத்துமீறி நுழைந்ததாக எனக்கு எதிராக கன்னியாகுமரி காவல்நிலையத்தில் குற்றஎண்.223/2014 என்ற வழக்கு பதிவு செய்யபட்டது என்றால் சரி. வாதியின் கைவச அனுபவ சொத்தில் நான் தொந்தரவு செய்வதற்கு எனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பணபலம் ஆள்பலம் மிக்க நபர்கள் என்றால்

சரியல்ல. என் உறவினர்கள் காவல்நிலையத்தில் அதிகாரிகளாக இருப்பதால் எந்த நேரத்திலும் எந்த சொத்திலும் அத்துமீறி நுழையலாம் என்றால் சரியல்ல.

எனது எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தானது ஆதியில் தானுமலையான் நாடாருக்கு பாத்தியபட்டது என்று சொல்லியிருப்பதில் அதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தானுமலையான்நாடாருக்கு நான் சொல்வதுபோல் 4 மக்கள் இருப்பதாக காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்து சுடலையாடும் பெருமாள்நாடாருக்கு பாத்தியபட்டு கிடைத்ததாக சொல்லும் ஆவணம் எதுவும் இல்லை என்றால் இல்லை. என் அம்மா எந்த ஆவணங்கள் அடிப்படையில் எங்களுக்கு செட்டில்மென்ட் எழுதிகொடுத்தார் என்றால் வாய்மொழி மட்டுமே ஆவணங்கள் எதுவும் இல்லை. பி.வா.சா.ஆ.1 பட்டாவில் முத்துசுவாமியின் பெயர் உள்ளது என்றால் சரி. கள்ளதனமாக உற்பத்தி செய்துள்ளார்கள். எங்கள் 4 பெயர்களும் பின்னால் சேர்க்கபட்டுள்ளது என்றால் சரி. 2003 ல் இந்த பட்டா எங்களுக்கு கிடைத்தது. அ.வ.எண்.163/2003 ல் தீர்ப்பாணை பிறப்பிக்கபட்ட பிறகும் பி.வா.சா.ஆ.1 பட்டாவில் எங்கள் பெயர் நீக்கம் செய்யபடவில்லை என்றால் தெரியாது. 2025 ல் நான் கரம் செலுத்தியுள்ளேன். அ.வ.எண்.163/2003 தீர்ப்பாணையில் எங்கள் செட்டில்மென்ட் ஆவணம் ரத்து செய்யபட்ட விவரம் வருவாய்துறையினருக்கு தெரியாததால் எங்களது பெயர் பி.வா.சா.ஆ.1ல் ரத்து செய்யபடவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கும் சர்வே எண்547/3 சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் பி.வா.சா.ஆ.1 பட்டாவி்ன் மூலம் நான் ஆதாயம் பெற முடியாது என்றாலும் சரியல்ல.

பி.வா.சா.ஆ.2 பாகபத்திரம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 544/3 என்பது முத்துசுவாமியின் சர்வே எண் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். நாகர்கோவில் தாலுகா

துணைவட்டாட்சியர் வா.சா.2 ஆக விசாரிக்கபட்டார் என்றால் சரி. அவரது சாட்சியத்தில் சர்வே எண்.544/3 என்பது தேசிய நெடுஞ்சாலை என்றும் அந்த சொத்திற்கும் முத்துசுவாமிக்கும் சம்பந்தம் இல்லை என்றும் முத்துசுவாமியின் சர்வே எண்.547/3 என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 547/3 ன் பட்டாவில் எங்கள் 4 பேர் பெயரும் உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். 547/3 ன் பழைய சர்வே எண்.1101 என்று வா.சா.2 சாட்சியம் அளித்துள்ளார் என்றால் தெரியாது. 547/3 ன் பழைய சர்வே எண்1727 அல்ல என்றால் எனக்கு ஞாபகமில்லை. அதனால் 547/3 ல் எனக்கு எந்த உரிமையோ அவகாசமோ கைவச அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் தவறான சர்வே எண் இருப்பதால் முத்துசுவாமியின் சொத்து அல்ல என்றோ அவரிடம் இருந்து கிரயம் பெற்ற நபர்களுக்கோ உரிமை இல்லை என்று நான் தர்க்கம் செய்ய இயலாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 முதல் 8 வரையான ஆவணங்கள் பி.வா.சா.ஆ.1ன் அடிப்படையில் பெற்ற தவறான ஆவணங்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 , 3 முதல் 8 ஆவணங்கள் வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்தவித உரிமையும் அளிக்காது என்றாலும் அதனால் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ய எங்களுக்கு அருகதை இல்லை என்றாலும் பிராதில் 2 வது பரிகாரமாக கோரியிருக்கும் உறுத்து கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றாலும் சரியல்ல.

நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தை எனக்காக மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, 4 சகோதரிகளுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். 4 சகோதரிகளுக்காக தாக்கல் செய்ததாக என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. என் தாத்தாவின் பெயர் சுடலையாடும்பெருமாள் ஆகும். அவர் என் அம்மாவின் அப்பா ஆவார். என்

முதல்விசாரணை வாக்குமூலத்தில் சுடலைபெருமாள் நாடார் என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் நான் சுடலையாடும்பெருமாள் என்று சொல்லியது தவறாக சுடலைபெருமாள் என்று தட்டச்சாகியுள்ளது. சுடலைபெருமாள் என்று எனக்கு தாத்தா யாரும் இல்லை என்றால் சரி. தாவா சொத்தும் அதனுடன் கூடுதல் சொத்தும் என் தாத்தாவின் அப்பா தானுமாலையநாடாருக்கு பாத்தியபட்டது என்று காண்பிக்க ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அந்த 65 செண்ட் சொத்தில் என் தாத்தா சுடலையாடும்பெருமாளுக்கு வாக்கரால் பாகம் கிடைத்ததாக சொல்வதற்கும் ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

வழக்கு சொத்தை என் தாத்தா சுடலையாடும்பெருமாள் அனுபவித்து வந்ததை காட்டும் ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரி. என் தாத்தாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரே மகள் என் அம்மா ஆவார். சுடலையாடும்பெருமாளுக்கு ஒரே மகள் என்று காட்ட ஏதாவது ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. என் தாத்தா 1980 க்கு முன்பாகவே இறந்து விட்டார். வழக்கு சொத்தில்ஒரு பகுதியை ஆக்கிரமித்து அந்த சொ'த்தை திரும்ப பெற முத்துசாமி அ.வ.எண்.163/2003 வழக்கை தாக்கல் செய்து அதில் ஒழிப்பித்து எடுத்ததாக சொல்லப்படும் வீட்டில் நான் எ ன் அம்மாவுடம் இருந்ததாக என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. ஒழிப்பித்து தரக்கூடிய சமயத்தில் என் அம்மா ஊரில் இல்லை.

அ.வ.எண்.163/2003 ல் என்னையும் என் அம்மா மற்றும் சகோதரிகள் அனைவரையும் ஒழிப்பித்து முத்துசாமிசொத்தை திரும்ப பெற்றார் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் ஒழிப்பித்து எடுத்த ஆவணத்தில் என் அம்மா கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் அம்மா மற்றும் எங்களிடம் இருந்து ஒழிப்பித்து பெற்றது தவறு என்றும்

அ.வ.எண்.163/2003 தீர்ப்பாணை தவறு என்றும் நான் எந்த மேல்நடவடிக்கையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2004 ல் நாங்கள் மனு தாக்கல் செய்தோம் அது கோப்பிற்கு எடுக்கபடாமல் திருப்பபட்டது. கோப்பில் எடுக்காமல் திருப்பபட்டதற்கு நான் உயர்நீதிமன்றத்தில் ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அ.வ.எண்.163/2003 ன் தீர்ப்பாணையை ரத்து செய்யகோரி தற்போது வரை எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்றால் சரி.

அ.வ.எண்.163/2003 தீர்ப்பாணை ரத்து செய்யபடாததால் அம்மா எங்களுக்கு எழுதிகொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் இல்லா நிலையது என்றாலும் அது செல்லாத ஆவணம் என்றாலும் தற்போது வரை அ.வ.எண்.163/2003 தீர்ப்பாணை ஊர்ஜிதத்தில் உள்ளது என்றாலும் அந்த விவரம் எனக்கு தெரியாது. அனைத்து விவரங்களையும் தெரிந்து கொண்டு தெரியவில்லை என்று வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில்என் அம்மாவிற்கு அழைப்பாணை சார்பு செய்யவில்லை என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அ.வ.எண்.471/2012 வழக்கை தவறான சொத்து விவரங்களை கொண்டு தாக்கல் செய்து ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அவர்கள் சொத்து விவரமும் எங்கள் சொத்து விவரமும் வேறு வேறானவை. வாதி வழக்கு சொத்தை விலைக்கு வாங்கி தேதியில்இருந்தே கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

வாதியின் அனுபவத்தை நான் தொந்தரவு செய்ததால் இந்த வழக்கை நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ய எனக்கு எந்த அருகதை இல்லை என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கில் கோரிய நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.